பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

# காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID)

## பற்றுறுதி காப்புறுதிப் பத்திரம்

இந்த ஆவணமானது, உங்களது காப்புறுதியைப் பற்றிய சுருக்க சாராம்சமொன்றை வழங்குகின்றது. பூரண விபரங்களுக்கு, முழுமையான காப்புறுதிப் பத்திரத்தையும் அட்டவணையையும் உசாவவும், ஏதும் முரண்பாடு காணப்பட்டால், காப்புறுதிப் பத்திரமே மேலோங்கியிருக்கும்.

### 1. காப்புறுதி காப்பீட்டு வகை

**பற்றுறுதி காப்புறுதிப் பத்திரமானது,** அவர்களுடைய வேலைக் காலத்தின் போது, காப்புறுதி செய்யப்பட்ட வேலையாட்கள் புரிந்த ஊழல் மற்றும் நேர்மையற்ற செயல்களினால் விளைந்த நேரடி நிதி இழப்புகளுக்கு எதிராக உங்கள் வர்த்தகத்துக்கு பாதுகாப்பு வழங்கும்.

### 2. பிரதான பயன்பாடுகள் (எதனைக் காப்பீடு செய்கின்றது)

2.1 காப்புறுதி செய்யப்பட்ட வேலையாட்கள் புரிந்த ஊழல் மற்றும் நேர்மையற்ற செயல்களினால் விளைந்த நேரடி நிதி இழப்புகளுக்கு எதிராக உங்கள் வர்த்தகத்துக்கு பாதுகாப்பு வழங்கும்.

2.2 கீழ் வருமாறு அச்செயல்கள் இடம் பெற்றிருந்தால் காப்பீடு பிரயோகமாகும்.

2.2.1 காப்புறுதிக் காலத்தின் போது கண்டுபிடிக்கப்பட்டால்.
2.2.2 அத்தகைய வேலையாட்களின இடையறா தொடர்ச்சியான வேலை காலத்தின் போது.
2.2.3 அவருடைய தொழில் சம்பந்தமானதும், காப்புறுதிக் காலத்தின் போதோ அல்லது அதன் பிறகு ஆறு மாத காலத்தினுள்ளோ அல்லது அத்தகைய தொழில் அறுதியுற்று ஆறு மாத காலத்தினுள்ளோ கண்டுபிடிக்கப்பட்டதும், எது முதலில் இடம்பெறுவதுமாகும்.

**வரையறை பிரயோகம் –**

1. வேலையாள் ஒருவருக்கான காப்பீடு, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதி தொகைக்கு உட்பட்டது.
2. இக்காப்புறுதியின் கீழான மொத்த கோரிக்கைகளாவன, மொத்த காப்புறுதி தொகையை விஞ்சக் கூடாது.
3. ஒரு வேலையாளுக்கு ஒரு கோரிக்கை மாத்திரமே அனுமதிக்கப்படும்.

**பிரதான விடுகைகள் (காப்பீடு செய்யப்படாதன)**

3.1 வேலையாட்களின் கடமைகள், வர்த்தகம் அல்லது கணக்கு பரிசோதனைகள் என்பவற்றின் மாற்றங்கள் காப்புறுதி வழங்குனருக்கு அறிவிக்கப்படாமை.

3.2 பெயரினால் அடையாளம் காணப்பட முடியாத அல்லது இலங்கைக்கு வெளியே செயற்படும் வேலையாட்களினால் விளைந்த இழப்புக்கள்.

3.3 காப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (மேலதிக) கழிக்கத் தக்கன.

3.4 ஊழல் மற்றும் நேர்மையற்ற செயல்கள் புரிந்ததாக முன்னர் அறியப்பட்ட வேலையாட்களினால் விளைந்த இழப்புக்கள்.

3.5 ஸ்தாபனத்தின் த.தொ/தரவு செயலாக்க பிரிவில் தொழில் புரியும் தொழிலாளர்களினால் புரியப்பட்ட (அடிப்படை பிரத்தியேக கணணி உபயோகம் தவிர்ந்த) கணணி தொடர்பான ஊழலும் முறைகேடான தகவல் கையாள்கையும்.

**பிரதான விடுகைகள் மாத்திரமே மேலே விபரிக்கப்பட்டுள்ளன. விடுகைகளின் முழுமையான பட்டியலுக்கு, தயவு செய்து காப்புறுதி ஆவணத்தை உசாசவவும்.**

**4. தவணைக் கட்டணம் செலுத்தும் முறை**

ஒரு வருட காலமாகிய, முழுக் காப்புறுதிக் காலத்துக்கும் **ஒரே செலுத்துகையில்** உங்கள் காப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

**5. முக்கியமான தகவல்களை வெளியிடுவதில் காப்புறுதி பெருநரின் கடமைப்பாடுகள்.**

5.1 காப்புறுதியின் தொடக்கத்திலேயே பூரணமானதும் சரியானதுமான தகவல்களை நீங்கள் வழங்க வேண்டும்.

5.2 வேலையாட்களின் கடமைகள், சம்பளக் குறைப்பு அல்லது வியாபார செயற்பாடுகளில் ஏதும் மாற்றம் பற்றி பயார்பஸ்ட்டுக்கு உடனடியாக அறிவிக்கவும்.

5.3 முறையான கணக்கீட்டு முறைமையையும் உள்ளக கட்டுப்பாடுகளையும் பேணவும்,

5.4 இணங்குவதற்கு தவறும் விடத்து கோரிக்கைக்கான உங்கள் உரிமையா பாதிக்கும்.

**6. கோரிக்கையொன்று முன்வைக்கப்படும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை.**

படிமுறை 1 – உடனடியாக எமக்கு அறிவிக்கவும்.

கண்டுபிடிக்கப்பட்டவுடன் பயார்பஸ்ட்டுக்கும் பொலீசுக்கும் அறிவித்தல்.

படிமுறை 2 – பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டாம்.

பொறுப்பை ஏற்றுக் கொள்ளவோ அல்லது சமரசத்துக்கு இணங்கவோ வேண்டாம்.

படிமுறை 3 – விசாரணைகளில் துணை புரியவும். பதிவுகளை அனுக இடமளிக்கவும். கோரப்பட்டால் மீளப் பெறும் செயற்பாடுகளைத் தொடரவும்.

படிமுறை 4 – எழுத்து மூல விபரங்கள் 30 நாட்களுக்குள் ஒப்படைக்கப்படல்.

படிமுறை 5 – ஆதார ஆவணங்களையும், கணக்கீட்டு பதிவுகளையும் மற்றும் ஏனைய கோரப்படும் சாட்சியங்களையும் வழங்கவும்.

படிமுறை 6 – ஒரு வேலையாளுக்கு ஒரு கோரிக்கை மட்டுமே செலுத்த முடியும்.

படிமுறை 7 – கோரிக்கை செலுத்தப்பட்டதன் பிறகு மீள் பெறப்பட்ட நிதிகள் (கோரிக்கை தொகை வரை) காப்புறுதி வழங்குனருக்கே உரித்தாகும்.

## 7. முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

+94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பயார்பஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

+94 11 2335167 | info@ircsl.gov.lk | www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

+94 11 2505542 / +94 11 2505041 |

info@insuranceombudsman.lk | www.insuranceombudsman.lk

## 8. மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை

+94 11 2428428 | info@fairfirst.lk | www.fairfirst.lk

**கோரிக்கை தொடர்பான விசாரணைகளுக்கு தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளவும்**

✉ nonmotorclaimsteam@fairfirst.lk

☎ +94 11 2428618

## 9. வேறேதும் தகவல்கள்

9.1 பரஸ்பர உடன்பாட்டுடன் காப்புறுதியானது வருடாந்தம் புதுப்பிக்கத் தக்கதாகும்.

9.2 காப்புறுதி செய்யப்பட்ட வேலையாட்களினதும், வர்த்தக நிலைமைகளினதும் மாற்றங்கள் அறிவிக்கப்பட வேண்டும்.

8.3 முறைகேடான கோரிக்கைகள் பயன்பாடுகளின் பறிமுதலுக்கு வழிகோளலாம்.

9.4 சச்சரவுகள், குறைகேள் ஆணையாளருக்கு முன்வைக்கப்படலாம் அல்லது (பரஸ்பர உடன்பாட்டுடன்) நடுவர் தீர்ப்பின் மூலம் தீர்க்கப்படலாம்.

9.5 சட்ட நியாயாதிக்கம் இலங்கைக்குள் மட்டுமே பிரயோகமாகும்.

9.6 முறையான கணக்கீட்டு முறைமைகளைப் பேணுவது, கோரிக்கைக்கான தகுதி பெறுவதற்கு அத்தியாவசியமானதாகும்.

9.7 கோரிக்கைக்கு செலுத்தியதன் பிறகு மேற்கொள்ளப்பட்ட மீள் பெறுகைகள், செலுத்தப்பட்ட தொகை வரை, காப்புறுதி வழங்குனருக்கு உரியதாகும்.

**முக்கிய குறிப்பு** – பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளைப் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்.